# திருமூலர் திருமந்திரம்

டாக்டர் சுப. அண்ணாமலை
தமிழ்நாடு

சமய நெறியைப் பரப்பிய சான்றோர்களிலும், மக்களினம் முழுவதற்குமான பொதுநெறியைப் பரப்பியவர்கள் உண்டு. அவர்களுள் முதலாமவர் திருமூலர்.

அவர் யோகி; சித்தர்; இமயமலைச் சாரலில் இருந்து தமிழகத்துக்கு வந்தவர். திருவாவடுதுறையில் 'படர் அரசு' என்று வழங்கப்பட்டுச் 'சிவபோதி' எனத் திருமூலர், தாமேயும் குறிப்பிடும் அரசமரத்தின் நிழலில் இருந்து பொதுநெறி, அதன்வழி நின்று இறையனுபவம் பெறுவதற்கு உரிய சாதனை வழியாகிய யோகம், அதில் பயன்படுத்தும் மந்திரங்கள், அந்த மந்திரங்களின் அமைப்பு முறையாகிய -உச்சாடண முறையாகிய-யோகிக்குத் தியான முறையாகிய -சக்கரங்கள் முதலியவற்றை 3000 பாடலாக அவர் பாடிய நூலே திருமந்திரம்.

அவர் யோகி என்பதைவிட **''அன்பே கடவுள்''** என்ற பொதுச் சமயத்தை -உலகச் சமயத்தைப் பரப்ப வித்திட்டவர் என்பதே சிறப்பானது.

**''அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே''**

என்பதுதான் திருமந்திரம் அறைகூவிச் சொலும் வாழ்க்கை உண்மை.

மனம் அன்பால் பக்குவப்படுவதுதான் சமயத்தின் ஆழ்ந்த உண்மை, தாய் தந்தையரிடமும், மனைவி மக்களிடமும் பிரியத்துடன் இருப்பது கலப்பு இல்லாத அன்பு அல்ல. அதில் சுயநலம் கலந்திருக்கக் கூடும். உறவில்லாதவரிடம், தமது நிலையைவிடத் தாழ்ந்தவரிடம், ஏழைகளிடம், நோயாளிகளிடம் -அவர்கள் துன்பத்தைக் கண்டு, நெகிழ்ந்து போய், அவர்களுக்குக் கனிவோடு உதவுவதுதான் கலப்பு இல்லாத அன்பு. அந்த அன்பின் உருக்கம், அந்த இரண்டு சாராரையும் பிணைத்து வைக்கின்றது. அந்த ஒருமைப்பட்டைக் கொண்டு இறைவனை உணர்ந்து கொள்ளவேண்டும். பேதங்கள் நீங்கி ஒருமை மலரும் போது, அந்த உணர்வில் இறைவன் புலப்படுவான்.

இறைவன் என்று ஒருவன் இருக்கிறானா? எங்கே இருக்கிறான்? என்று கேட்கின்றது விஞ்ஞான உலகம். திருமூலரின் வாய்மொழியாக, அதற்கு விடைசொல்லுவோம்.

''அன்பு இருக்கின்றதல்லவா? ஆகவே இறைவன் உள்ளான். கோயிலில் காண்பதற்கு முன்னே, அவனை அன்பிலே காணுங்கள். கண்டு பக்தி வையுங்கள். அவனை நினைத்து உருகி நில்லுங்கள். அப்படி நின்றால், கோயிலில் உள்ள திருமேனியிலும் அவன் நிற்பான். என்று வந்தாய் என்று அவன் கேட்பது போல உணர்வீர்கள். அவனை உங்கள் உடம்பிலும் ஒளிவடிவத்தில் காணலாம்''.

''அன்பின் உள்ளான்; புறத்தான்; உடலாய் உளான்'' என்பது திருமூலர் வாக்கு. இந்த வரிசையைக் கவனியுங்கள். அன்பே அடிப்படை, அதனைப் பெற்றால்தான், வழிபாட்டுச் சமயத்தாரும், யோக சாதனையாளரும் இறைவனை உணர முடியும்.

இறைவன் யாவர்க்கும், எல்லாவற்றுக்கும் முன்னே உள்ளவன். அதாவது, இவர்களும் அவையும் தோன்றக் காரணமாக உள்ளவன். இதனைத் திருமூலர்.
''முன்பின் உள்ளான்''
என்பார், முன் - பின் என்று பிரித்துச் சொல்லிப் பாருங்கள். 'முன்பே இருப்பவன் மட்டுமல்ல; பின்பும் இருப்பவன்' என்ற நயம் புலப்படும். அதாவது நம்மையெல்லாம் ஒடுக்குபவனும் அவன்தான். ''அந்தம் ஆதி என்மனார் புலவர்'' என்ற மெய்கண்டார் வாக்கை இங்கே நினைக்கலாம். (சிவஞான போதம், 1)

முனிவர்கள் வேதவழிப்பட்ட யாகங்களால் தேவர்களின் வரம் என்னும் வலிமையைப் பெற்றவர்கள். மற்றொரு வகை முனிவர்கள் வேதாந்த விசாரணை என்ற ஞான மார்க்கத்தில் செல்லுபவர்கள். இந்த இரண்டு வகை முனிவர்க்கும் இறைவனே தலைவன்.
''முனிவர்க்கும் பிரான் அவன்''
வர வலிமை, ஞானச் செல்வம் - இவற்றைப் பெற்றிருந்தால்கூட, அன்பினால்தான் இறைவனைக் காண முடியும் என்பது குறிப்பு.

உலகியல் போக்கில் செல்லுபவர்களைக்கூட இறைவன் அன்பு வழிக்கு இழுப்பான். கல்லைப் பிசைந்து கனியாக்குவான். அவர்களை அன்பராக்கி, அவரது உள்ளத்தில், அவர் முன்னே அனுபவித்த உலகியல் எல்லாம் பொய் என்று சொல்லும்படி, அரும்பொருளாக வீற்றிருப்பான்.

''அன்பினுள் ஆக்கி அமரும் அரும்பொருள்''
யார் இந்த அன்புக்காக வாழ்கின்றார்களோ, அவர்களுக்குத்தான் இறைவன் உடனாக நின்று,

ஆனந்த அனுபவம் அளிப்பான் -என்று திருமூலர் ''அன்பே சமயம்'' (Love is Religion) என்று அறைகூவும் திருமந்திரப் பாடல் இதோ;

''அன்பின் உள்ளான்; புறத்தான்; உடலாய் உளான்;
முன்பின் உள்ளான்; முனிவர்க்கும் பிரான் அவன்;
அன்பினுள் ஆக்கி அமரும் அரும்பொருள்;
அன்பின் உள்ளார்க்கே அணை துணையாமே''.

இறைவனை அனுபவித்து, அடைவதே வாழ்வின் நிறைந்த நிலை. இதனைப் ''பெருவாழ்வு'' என்பர் பெரியோர். இறைநிலையை அடைவது என்பது, அன்பு என்ற நீண்ட வரலாற்றில் சோதனைப் பாதைகள் பலவற்றைக் கடந்த பின் வரும் கடைசி அத்தியாயம். மக்களிடம் காட்டும் அன்பு தான் - தன்னலம் அற்ற சேவை செய்யும் அன்பு தான் - இறைவனிடம் கொள்ளும் அன்பாக மலர்ச்சி அடையும்; பரிணாமம் பெறும். அதுவே உண்மையான பக்தியாக இருக்கும். இப்படி இல்லாமல், எவ்வளவு வழிபாடு செய்தாலும் பயன் இல்லை. இவ்வாறு செய்பவர்களுக்கு ஆசைகள் நீங்கவில்லை. மனம் தூய்மையாகவில்லை. ஓர் இனம் புரியாத உணர்ச்சி மட்டும், ''இறைவனை வணங்க வேண்டும்'' என்று தோன்றுகிறது. வணங்குகிறார்கள்; விரதம், பூஜை, யாத்திரை - எல்லாம் மேற்கொள்ளுகிறார்கள். உலகியல் போக்கிலும் வாழ்கிறார்கள். ''நமது வழிபாட்டுக்குப் பயன் கிடைக்கும்; இறைவன் வானத்தில் தோன்றிக் காட்சி தருவான்; நம்மை அழைப்பான்'' என்று எண்ணுகின்றார்கள். ''மேகங்கள் கூடி இடியிடிப்பது போல், பலரும் அறிய, பலரும் சாட்சியாக -நம்மை அழைப்பான் என்று எண்ணுகிறார்கள். பல சமயம் அதில் அவர்களுக்குச் சந்தேகமும் வருகிறது'' - என்கின்றார் திருமூலர்.

''வான் நின்று அழைக்கும் மழைபோல் இறைவனும் தான் நின்று அழைக்குங்கொல்? என்று தயங்குவார்'' அவர்களுக்கு இறைவன் தம்மை அழைப்பான் என்பதில் உறுதிப்பாடு இல்லை என்பதைத் 'தயங்குவார்' என்ற சொல்லால் தெரிவிக்கின்றார்.

அவர்கள் எண்ணுவது தவறு - என்று கூறி நல்வழி காட்ட எண்ணுகிறார் திருமூலர். இறைவனுடன் எப்படி உறவு கொள்ள வேண்டும் என்பதற்குத் தம்மையே உதாரணமாகக் காட்டுகின்றார்.

வானத்தில் இடியிடிக்கும் மேகத்திற்கும் நமக்கும் ஒரு தொடர்பு இல்லை. அதுபோல் நம்முடன் தொடர்பு இல்லாதவனல்ல இறைவன். பசுவுக்கும் கன்றுக்கும் உள்ள உறவு, அவனுக்கும் நமக்கும். இதை உணர்ந்து, அவனிடம் அன்பு செலுத்துகிறார் திருமூலர். அவனை நினைத்த உடனே கண்ணீர் சொரிகின்றார். முடிமுதல் பாதம்வரை, அவனுடைய அழகிய திருமேனியை நினைத்துப் பார்த்து, அவனைக் காணவில்லையே என்று ஏங்குகின்றார். பித்துக் கொண்டவர் போல் ஆகின்றார். ''இறைவா, திருவொற்றியூரா, திருவாலவாயா, ஒரு பற்று இலாமையும் கண்டு அடியேனை ஏன்றுகொள்ளே'' என்று அப்பரடிகள் கதறியது போலக் கதறுகின்றார். தெருவுதோறும் அலறுகின்றார். கன்றைப் பிரிந்த பசு, அக்கன்றை அழைப்பதுபோல், பித்தாகும் அன்போடு இறைவனை அழைக்கின்றார். மாணிக்கவாசகர், ''அடியேன் ஆதரித்து அழைத்தால் அதெந்துவே என்று அருளாயே'' என்று இவரைப் போலவே கதறுவதைத் திருவாசகத்தில் கேட்கலாம். நினைந்துருகும் அடியாரை நையவைப்பதுதான் இறைவன் திருவிளையாடல். இவரை இன்னும் அழ வைக்கின்றான். ஊர் வேடிக்கை பார்க்கிறது. கேலி பேசுகிறது. பழித்துச் சொல்கிறது. செய்தி பரப்புகிறது ஆதலால், ''என் அன்புக்கு உலகமே சாட்சி'' என்கின்றார் திருமூலர்.

போலி வழிபாடு செய்பவர் நிலையையும் திருமூலரின் உண்மை அன்பையும் கூறும் திருமந்திரப்பாடல் இதுதான்.
''வான் நின்று அழைக்கும் மழைபோல் இறைவனும்
தான் நின்று அழைக்குங்கொல் என்று தயங்குவார்;
ஆன் நின்று அழைக்கும் அது போல் என் நந்தியை
நான் நின்று அழைப்பது ஞாலம் கரியே.
(கரி என்றால் சாட்சி என்பது பொருள்)

இறைவனைப் பற்றி நூல்கள் அறிவிக்கின்றன, உயிர்களைப் பற்றியும் உலகத்தைப் பற்றியும் உள்ள மெய்ம்மைகளைக் கூறுகின்றன. இந்த மூன்று பொருள்களையும் தருக்க முறைப்படி ஆராய்ந்து கண்ட கோட்பாடுகளை முன்பின் முரணில்லாமல் வகுத்துரைக்கின்றன. அதே மெய்ம்மைகளை ஆராய்ந்து வேறு நூல்கள் கூறும் கோட்பாடுகளை மறுத்தும் உரைக்கின்றன. இந்நூல்களைக் கற்கவேண்டும். இவற்றை விரித்து உரைப்பதும், சிந்திப்பதும், வாதம் புரிந்து இவற்றின் கோட்பாடுகளை நிலைநாட்டுவதும் அறிவுக்கு விருந்து என்பதில் ஐயமில்லை. ஆனால் இந்த விருந்தையே வாழ்நாள் எல்லாம் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள் சில அறிஞர்கள் உணர்வு - அனுபவமாகிய இறையின்பம் பெறாமலே இவர்கள் வாழ்க்கை முடிந்து போகிறது. இதனைத் திருமூலர் கூறுகிறார்:

''கல்வி அடையார் கலந்து, ஓடிப் போகின்றார்'' கலந்து என்றால், அளவளாவி, உரையாடி, வாதிட்டு -என்று பொருள்.

சரி, யோக நெறியில் செல்பவர்களைப் பார்ப்போம். அன்பு இல்லாமல், இறைபக்தி இல்லாமல் யோகம் பழகுவோர் மூச்சை வசப்படுத்துகிறார்கள். உடம்பில் மூலாதாரத்தில் உறங்கும் குண்டலி சத்தியை எழுப்பி, மேல்முகமாக ஏற்றவும் செய்கிறார்கள். ஆனால், அதோ, அன்பும் தொண்டும் பழகாததால், இறைபக்தி இல்லாததால், குண்டலியால் பெற்ற ஆழ்ந்த ஆற்றலை -சித்தியை -தம்முடைய பலவகை எண்ணங்களான உலகியல் நோக்கங்களை அடைவதற்காகச் செலவு செய்துவிட்டுப் பரிதாபமாக மாண்டு போகின்றார்கள்.

''பல்லி உடையார் பாம்பு அரிந்து உண்கின்றார்'' - பல்லி என்பது விவசாயி வைத்திருக்கும் தாளிக்கட்டை அதில் பல்லாக நிறைந்திருக்கும் அது இங்கே, பலவகை எண்ணங்களைக் குறிக்கிறது. பாம்பு என்பது குண்டலி. அரிந்து உண்ணுதல், செலவழித்துவிடுதல். செய்யக் கூடாத செயலைச் செய்கிறார்கள் என்ற குறிப்பை இங்கே வைக்கிறார்.

குண்டலி என்பது உடம்பில் உறையும் மூலசத்திதான். அதனால் மட்டும் இறையனுபவம் உண்டாகிவிடாது. இறைவனின் பெண்மைப் பாகமாக -அம்மையாக -விளங்கும் அருட்சத்தியின் கருணை நமக்குக் கிடைக்க வேண்டும். அன்பும் தொண்டும்தான் அதற்கு வழி. யோகிக்கு, குண்டலியுடன் அருட்சத்தி பதிந்து நின்றால், அவன் அந்தக் குண்டலி தனது புருவ மத்திக்கு ஏறும்பொழுது, இறைவனின் ஒளி வடிவத்தை, தன் உடம்பினுள்ளேயே, உள்ளுணர்வால் காணமுடியும். அதனால், எப்பொழுதாவது ஒரு நேரம், ஒரு கிழமை என்று இல்லாமல், இரவும் பகலும் அன்புடன் இறைவனை ஏத்தி இறைஞ்சினால், யோகியின் உடம்பு ஒளி உடம்பாக மாறும். அவன் மரணத்தை வெல்வான்.

காலையில், உதய காலத்திலே, குளத்தில் மொட்டாகக் குவிந்திருக்கும் தாமரையின் மீது சூரிய ஒளி பட்டவுடன் அது மலர்வது போல், யோகியின் உடலில் அருட்சத்தி பதிந்தால், அவன் உடம்பு ஒளி உடம்பாக மாறும். இதனைத் திருமூலர்,
''எல்லியும் காலையும் ஏத்த இறைவனை
அல்லியுள் ஆதித்த காயமும் ஆமே''
என்று கூறுகிறார். அல்லி - தாமரை இந்தப் பொருளில் நம்மாழ்வாரும் பெரியாழ்வாரும் பயன்படுத்தியுள்ளனர். ஆதித்த காயம் என்பது சூரிய ஒளி. யோகியுடம்பின் பரிணாமத்திற்கு, தாமைரையின் மலர்ச்சியை உவமையாகக் காட்டுகிறார். உள்ளது சிறத்தல்தானே பரிணாமம்? பிற்காலத்தில் இராமலிங்க வள்ளலார், ''திருமந்திரத் திருமுறையால் உணர்த்திய மெய்மொழிப் பொருள்'' என்று, இந்த யோக வழியைக் கூறி, பின்பற்றி, மரணம் இலாப் பெருவாழ்வு எய்தினார். திருவருட்பாவில் அதை விரிவாகக் கூறினார்.

இத்திருமந்திரம், ''கல்வி உடையார் கலந்து, ஓடிப்போகின்றார்;
பல்லி உடையார் பாம்பு அரிந்து உண்கின்றார்,
எவ்வியும் காலையும் ஏத்த இறைவனை
அல்லியுள் ஆதித்த காயமும் ஆமே''.
என்பதாகும்.

இவ்வாறு, உடம்பும் சித்தியடையும் இறையியலை - இறைநெறி வாழ்வைத் திருமந்திர நூலில் பெரும் பகுதியில் கூறுகின்றார்.

